நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை. திரு.ப.செந்தில்குமார், இ.ஆ.ப.

ந.க.எண்.9415/2010/எப்3 நாள். 05 .04.2010

பொருள்: பணிக்குழு – பொறியியல் பிரிவு – தூத்துக்குடி மாநகராட்சி – திரு.எஸ்.ஜே. மணிகண்டகுமார், பணி ஆய்வர் தொடர்ந்து மாநகராட்சியிலேயே பணிபுரிய அனுமதி வழங்கப்படுகிறது.

படிக்கப் பட்டவை:

1. இவ்வலுவலக செயல்முறைகள் கடித எண்.9415/2010/எப்3 நாள்.19.03.2010 மற்றும் 23.03.2010.
2. ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி கடித எண்.இ2/5277/2010. நாள்.31.03.2010
3. திரு. எஸ்.ஜே. மணிகண்ட குமார், பணி ஆய்வர், தூத்துக்குடி என்பவரின் விண்ணப்பம் நாள்.25.03.2010.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆணை நாள்.03.04.2010.

------

ஆணை:

படிக்கப்பட்டவை 1–ல் 2010–2011 பணி ஆய்வர் மற்றும் குழாய் ஆய்வர் தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு பணி மேற்பார்வையாளர் / பட வரைவாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

படிக்கப்பட்டவை 2–ல் மாநகராட்சி ஆணையர், தூத்துக்குடி கடிதத்தில் தேர்ந்தோர் பெயர் பட்டியல் வரிசை எண்.9ல் உள்ள திரு. எஸ்.ஜே. மணிகண்டகுமார், பணி ஆய்வர், தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது நகராட்சிப் பணிக்கு விருப்பம் தெரிவிக்காத காரணத்தாலும் அன்னாரின் குடும்ப சூழ்நிலை காரணமாக மாநகராட்சிப் பணியிலேயே தொடர்ந்து பணிபுரிய விரும்புவதாகவும் ஆதலால் தனது பதவி உயர்வினை துறப்பு செய்துள்ளதாகவும் தெரிவித்து அன்னாரின் படிக்கப்பட்டவை 3–ல் காணும் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்பட்டுள்ளது.

இப்பொருளினை ஆய்வு செய்ததில் திரு.எஸ்.ஜே.மணிகண்டகுமார், பணிஆய்வர், தூத்துக்குடி மாநகராட்சி நகராட்சிப் பணிக்கு விருப்பம் தெரிவிக்காத காரணத்தால் அன்னாரின் பெயரினை தேர்ந்தோர் பெயர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்து, பணி மேற்பார்வையாளர் பதவி உயர்வினை ரத்து செய்து அன்னாரை தூத்துக்குடி மாநகராட்சியிலேயே பணி ஆய்வராக பணிபுரிய அனுமதித்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது. மேலும் திரு.எஸ்.ஜே. மணிகண்டகுமார், பணி ஆய்வர், தூத்துக்குடி மாநகராட்சி, இனி நகராட்சிகளில் பணிபுரியும் பணி ஆய்வர் / குழாய் ஆய்வர் பணி மூப்பு பட்டியலில் முன்னுரிமை கோர இயலாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/—வெ.பிச்சை
நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக.

பெறுநர்:

திரு.எஸ். ஜே. மணிகண்ட குமார்,
பணி ஆய்வர்,
தூத்துக்குடி மாநகராட்சி (மாநகராட்சி ஆணையர் மூலமாக).
நகல்:
1. மாநகராட்சி ஆணையர்,
தூத்துக்குடி
2. நகராட்சி ஆணையர்,
நாகர்கோவில்.
3. ITS for Website.
4. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
திருநெல்வேலி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை. திரு.ப.செந்தில்குமார், இ.ஆ.ப.

ந.க.எண்.14012/2009/எப்3 நாள். 05 .04.2010

| | |
|---|---|
| பொருள்: | பணிக்குழு – பொறியியல் பிரிவு – இராஜபாளையம் மாநகராட்சி – திருமதி. கா.அழகேஸ்வரி, பணி ஆய்வர் தொகுப்பூதியத்தில் ஓராண்டு காலம் பணிமுடித்து 27.05.99 முதல் அன்னாரது பணியை பணப்பயன் ஏதுமின்றி பணி வரன்முறை செய்யப்பட்டு – பணி ஆய்வர் / குழாய் ஆய்வர் இறுதி பணிமூப்பு பட்டியலில் பெயர் சேர்ப்பது – தொடர்பாக. |
| படிக்கப் பட்டவை: | 1. அரசாணை எண்.(3டி) எண்.14, ந.நி.(ம)கு.வ.துறை நாள்.12.11.09<br>2. நகராட்சி ஆணையாளர், இராஜபாளையம் கடித எண்.இ1/922/2009, 27.11.09.<br>3. திருமதி. கா.அழகேஸ்வரி, பணி ஆய்வர், இராஜபாளையம் கடித நாள். இல்லை.<br>4. நகராட்சி ஆணையர், இராஜபாளையம் கடித ந.க.எண்.இ1/922/2009 நாள். 20.01.2010. மற்றும் 13.03.2010.<br>5. நியமனக் குழு தீர்மான எண்.1, நாள்.11.03.2010. |

------

**ஆணை:**

1. படிக்கப்பட்டவை 1–ல் காணும் அரசாணையில் இராஜபளையம் நகராட்சியில் பணி ஆய்வர் பணியில் உள்ள திருமதி.கா.அழகேஸ்வரியின் 11.03.2009 நாளிட்ட மனுவை ஏற்று, பணி ஆய்வர் பணியிடத்தில் அன்னார் தொகுப்பூதியத்தில் ஓராண்டு காலம் பணி முடித்த காலமான 27.05.1999 முதல் அன்னாரின் பணியை பணப்பயன் ஏதுமின்றி வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது.

2. படிக்கப்பட்டவை 4–ல் காணும் இராஜபாளையம் நகராட்சி ஆணையர் 13.03.2010 நாளிட்ட கடிதத்தில் படிக்கப்பட்டவை 5–ல் உள்ள நியமனக்குழு எண்.1 நாள்.11.03.2010–ல் மேற்கண்ட அரசாணையின்டி திருமதி. கா.அழகேஸ்வரி, பணி ஆய்வர் என்பவரது பணியை 27.05.1999 முதல் காலியாக உள்ள பணி ஆய்வர் பணியிடத்தில் பணப்பயன் ஏதுமின்றி வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

3. அதனடிப்படையில் பணி ஆய்வர் / குழாய் ஆய்வர் இறுதி பணி மூப்பு பட்டியலில் அரசாணையின்படி திருமதி. கா.அழகேஸ்வரி, பணி ஆய்வர் பணியினை 27.05.1999–ல் பணி வரன்முறைபடுத்தினால், வரிசை எண்.15 திரு. பி.செல்வராஜ், குழாய் ஆய்வர், தூத்துக்குடி என்பவருக்கும், வரிசை எண்.16 திரு. ஜி. திருமலை ராமன், பணி ஆய்வர், திருப்பூர் என்பவருக்கும் இடையில் வரிசை எண்.15A ஆக சேர்க்க தகுதி உடையவராகிறார்.

4. இதன்படி திருமதி.கா.அழகேஸ்வரி, பணி ஆய்வர்க்கான இறுதி பணிமூப்பு பட்டியலில் வரிசை எண்.15A ஆக அன்னாரின் பெயரினை சேர்த்து ஆணையிடப்படுகிறது.

5. இதற்கான ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இச்செயல்முறை ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. இச்செயல்முறை ஆணை பெற்றுக் கொண்டதற்கு ஏற்பளிப்பு உடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஒம்/–வெ.பிச்சை
நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக.

பெறுநர்:

திரு. ஜி. திருமலை ராமன், பணி ஆய்வர், திருப்பூர்.
திரு. கே.முனிஸ்வரன், குழாய் ஆய்வர், இராமநாதபுரம்.
திரு.ஆர்.குமாரசாமி, பணி மேற்பார்வையாளர், இராஜபுரம்
திரு. ஏ.அம்பலத்தரசன், பணி ஆய்வர், தர்மபுரி.
திரு. கே.சாம்ராஜ், குழாய் ஆய்வர், தர்மபுரி.
திருமதி.டி.எஸ். ஷோபா, பட வரைவாளர், கோவில்பட்டி.
(நகராட்சி ஆணையர் மூலமாக).

நகல்:

நகராட்சி ஆணையர், இராஜபாளையம்.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி.
ITS for Website.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்.

D:\F3-2008\14012-09.doc